தமிழ்நாடு சட்டப்பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1969 ஆகஸ்ட் 19.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

"C. King International"

* 21 *Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether the Commissioner of Police, Madras warned the people against the activities of C. King Internatinal, a British firm, about the 6th October 1968?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆம். இது ஒரு போலி கம்பெனி என்பது புலனாய்வின் மூலம் தெரியவந்தது. எனவே, பொதுமக்கள் பத்திரிகைக் குறிப்பு வாயிலாக எச்சரிக்கப் பட்டனர்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற இதுபோன்ற வெளிநாட்டு நிறுவனங்கள் பற்றி நடவடிக்கை எடுக்கும் முறையில் கண்காணிப்பைக் கடுமை யாக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? இந்தக் கம்பெனி மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு இழப்பு ஏற்பட் டிருக்கிறதென்றால் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது ஒரு போலி கம்பெனி என்று ஒய்.எம்.சி.ஏ. காரியதரிசியும் காப்பாளருமான திரு. சௌந்தரராஜன் அவர்கள் காவல் துறையினருக்குத் தகவல் அனுப்பினார்கள். அவர்கள் லங்காஸ்டரிலுள்ள போலீஸ் துறை யினருக்கு இது சம்பந்தமாக தகவல் கேட்டு எழுதினார்கள். அங்கு அப்படி ஒரு நிறுவனம் இல்லை என்று அவர்கள் தகவல் தெரிவித்தார்கள். எனவே, அதன்மீது நடவடிக்கை எடுக்கப் பட்டது. இதுபோன்ற நிறுவனங்கள்பற்றி காவல்துறை நட வடிக்கை எடுக்கும். ஒய்.எம்.சி.ஏ. காரியதரிசி தகவல் கொடுத் ததைப்போல் அங்கங்கே உள்ள பொதுமக்கள் அப்படி ஏதாவது தகவல் அனுப்பினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. விநாயகம்: இந்தக் கம்பெனி போலி கம்பெனி என்ப தற்கு எந்த ஆதாரம் இருக்கிறது? அவர்கள் எந்தவிதமாக பொது மக்களை ஏமாற்றினார்கள்? ஏமாற்றப்பட்ட பொதுமக்கள் நேரடி யாக அரசுக்கோ அல்லது போலீஸ் கமிஷனருக்கோ தகவல் தெரி வித்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சி. கிங் இன்டர்நேஷனல் என்ற பெயரால் விளம்பரம் செய்யப்பட்டு, அதிலே இரண்டு பவுண்ட் கொடுத்து யாரும் பதிவு செய்துகொண்டால் அவர்களுக்கு காமன்வெல்த் நாடுகளிலே வேலை வாய்ப்புத் தேடித்தரப் படும் என்று அறிவித்தார்கள். அதைக் கண்ணுற்ற ஒய்.எம்.சி.ஏ. காரியதரிசி லங்காஸ்டரிலுள்ள ஒய்.எம்.சி.ஏ. காரியதரிசிக்கு இது பற்றி கடிதம் எழுதினார்கள். அவர்கள் அப்படி ஒரு நிறுவனம் இல்லை, அது போலி நிறுவனம் என்று தகவல் கிடைத்ததும் காவல் துறையினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். இதுசம்பந்தமாக தமிழ்நாட்டு மக்களுக்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் கைதானவர்கள்

*31 வினா—**திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இம்மாநிலத்தில் மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் 1966-67, 1967-68-ல் எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள்?

(இ) மதுவிலக்குக் கொள்கையினைத் தீவிரப்படுத்த அரசு ஏதேனும் திட்டம் வகுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:

(அ)	1966-67	1,66,601
	1967-68	2,10,061

(இ) மதுவிலக்குக் கொள்கை ஏற்கெனவே கண்டிப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. பெ. மலைச்சாமி: தமிழகத்தில் பார்மசி என்ற முறையில் லைசன்ஸ் பெற்றுக்கொண்டு மதுக் கஷாயங்கள் அதிகமாக விற்பனை ஆகிக் கொண்டிருக்கின்றன. எனவே, அதற்காக வழங்கப்படுகின்ற லைசன்ஸை அரசு ரத்து செய்யுமா, அல்லது மதுவிலக்கை ரத்து செய்யுமா என்று பொதுமக்கள் சந்தேகப்படுகிறார்கள். பொதுமக்கள் கருத்தை இந்த அரசு மதிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது மத்திய அரசினுடைய டிரக்ஸ் ஆக்டின் கீழ் வருகிறது. ஆகவே, தமிழக அரசுக்கு இதை ரத்து செய்ய அதிகாரம் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மதுவிலக்கு சம்பந்தமாகக் கேள்விகள் எழுப்பப்படுகின்ற போதெல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் இது ஒரு கேள்விக்குறியாகவே இருக்கிறது என்று பதில் சொல்லுகிறார்கள். பொதுமக்களிடையே மதுவிலக்கு ரத்து செய்யப்படுமா என்ற சந்தேகம் எழுகின்ற காரணத்தினால், இந்த மாநிலத்திலே மதுவிலக்கை அமல் படுத்துவது பற்றி திட்டவட்டமான கொள்கையை இங்கே முதல் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?